අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My Ref. | ED1/1/3/2 -I | ඔබේ අංකය / உமது இல / Your Ref. | |
| දිනය / திகதி / Date | 2022.05. 09 | | |

சுற்றறிக்கை இலக்கம் - 22 /2022

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலய கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அரச பாடசாலை அதிபர்கள்
சகல அரச அனுமதிப் பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்

## அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கர்நாடக சங்கீதப் போட்டி / முஸ்லிம் மாணவர்களுக்கான போட்டி – 2022

கல்வி அமைச்சின் அழகியல் கிளையினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற இப்போட்டியானது 2022ஆம் ஆண்டிலும் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்விடயம் பற்றி மாகாணத்தின் / வலயத்தின் சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்குமாறு தெரிவிக்கின்றேன். அத்தோடு இப் போட்டிக்கு மாணவர்களின் படைப்புத்திறனை முன்வைப்பதற்கு தேவையான வசதி வாய்ப்புகளை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

### அறிமுகம்

கல்வி அமைச்சின் அழகியல் கிளையினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற இப்போட்டியினால் மாணவர்களின் இசைத்துறை வளர்ச்சி மேம்படுத்தப்படுகிறது. இப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு உயர் கல்வியின் போது முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

### போட்டியின் நோக்கம்

இசைத்துறை மாணவர்களின் ஆற்றுகைப்படுத்தும் திறன் மற்றும் படைப்பாற்றல் திறனை விருத்தி செய்யும் நோக்கில் இப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

### போட்டிக்கான பொது விதிமுறைகள்

**1. 01 போட்டிப் பிரிவுகள்**

பங்குபற்றும் போட்டியாளர்கள் பிரதான மூன்று பிரிவுகளுக்கு உட்படுவர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | சிரேஷ்ட போட்டி பிரிவு | தரம் | 10 | தொடக்கம் | 11 | வரை |
| 2. | சிரேஷ்ட உயர்நிலைப் போட்டி பிரிவு | தரம் | 12 | தொடக்கம் | 13 | வரை |
| 3. | திறந்த போட்டி பிரிவு | தரம் | 10 | தொடக்கம் | 13 | வரை |

1. 02 பங்குபற்றும் பாடசாலைகள் பிரதான மூன்று பிரிவுகளுக்குள் உட்படுத்தப்படும். இது தொடர்பாக போட்டி விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் குறித்த பாடசாலைகள் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | 300 | வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் |
| 2 | 301 - 1000 | வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் |
| 3. | 1001- ற்கு | மேல் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் |

## 2. பங்குபற்றும் விதிமுறைகள்

2.1 அரச பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

2.2 பக்க வாத்தியத்திற்காக உரிய பாடசாலை மாணவர்களை பங்குபற்ற செய்யலாம் எனினும் வாசிக்க பரிச்சயமான மாணவர்கள் உரிய பாடசாலையில் இல்லாத போது அதே மாகாணத்தைச் சார்ந்த வேறு பாடசாலை மாணவர்களையும், ஆசிரியர்களையும் பங்குபற்ற செய்யலாம்.

2.3 பக்க வாத்தியத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு போட்டி தலைப்புக்குரிய வடிவமைப்பை கலைத்துக் கொள்ளமுடியாது.

2.4 எந்த ஒரு போட்டி நிகழ்வுகளிலும் தனியார் பாடசாலை ஆசிரியர்களோ, கலைஞர்களோ பக்க வாத்திய காரர்களாக பங்குபற்ற முடியாது.

2.5 [illegible] ஒரு பாடசாலையின் தரம் 10 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்றுவதுடன் இரண்டாம் முறையாக உயர்தரப் பரீட்சைக்கு 2022ம் ஆண்டில் தோற்றும் மாணவர்களும் பங்குபற்றலாம்.

2.6 ஒரு பாடசாலை 03 (மூன்று) நிகழ்ச்சிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும்.

2.7 இப் போட்டிக்காக தயாரிக்கப்படுகின்ற பாடல்கள் இன, மத பேதங்களுக்கோ அல்லது அரசியல் சார்ந்த கருத்துகளுக்கோ விதந்துரைக்காதவையாகவும், பாடசாலை மாணவர்களுக்குப் பொருத்தமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

2.8 எழுதப்பட்ட பாடல்களை அச்சுப்பதித்த மூன்று பிரதிகளாக போட்டியின் ஆரம்பத்தில் நிகழ்ச்சிக்குரிய நடுவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2.9 வலய, மாகாண மட்ட போட்டிகளின் போது வெளி உடைகளில் பங்குபற்றாது பாடசாலை சீருடையிலேயே கட்டாயம் பங்கு பற்றுதல் வேண்டும்.

2.10 தேசிய மட்ட போட்டிகளின் போது கலாசார உடைகளை பொருத்தமாகவும், நேர்த்தியாகவும் அணிதல் வேண்டும்.

2.11 இவ் உடைகள் பாடசாலை முறைமைக்கு பொருத்தமாக இருக்க வேண்டியதுடன் அது பற்றிய பூரண பொறுப்பும் பாடசாலை அதிபரையும், பாட பொறுப்பாசிரியரையும் சார்ந்தது.

2.12 இறுதிப் போட்டிக்கான தேர்வுகளின்படி பங்குபற்றாத போட்டியாளர்கள் அப் போட்டிக்கு பங்குபற்றவில்லை என கருதி முடிவுகள் அறிவிக்கப்படும்.

## 3. போட்டி ஒழுங்குமுறை

3.1 இப் போட்டியானது வலய மட்டம், மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகிய ஒழுங்கு முறையில் மூன்று சந்தர்ப்பங்களில் இடம்பெறும்.

3.2 வலய போட்டியானது உரிய வலய கல்விப் பணிப்பாளரால் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

3.3 மாகாண போட்டிகளின் சகல பொறுப்புகளும் மாகாண கல்வி பணிப்பாளருக்கு வழங்கப்படுவதோடு இச்சுற்றுநிருபத்திற்கு அமைவாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் மாகாண கல்வி பணிப்பாளரைச் சாரும்.

3.4 போட்டிகளை நடாத்தி முடிவுகளை மாகாண போட்டி ஒழுங்கமைப்பிற்காக உரிய வருடங்களில் வெளியிடப்படும் சுற்று நிருபங்களில் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வி பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

3.5 வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களே தேசிய மட்டம் வரை பங்குபற்ற வேண்டும்.

3.6 போட்டி நிகழ்வொன்றில் பங்குபற்றும் போட்டியாளர் முதலில் பங்கு பற்றும் பாடசாலை சார்பில் தொடர்ந்து வரும் போட்டிகளிலும் பங்குபற்ற வேண்டும். வேறு பாடசாலைக்கு இடை விலகும் பட்சத்தில் மேற் கூறிய விடயம் கட்டாயம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

3.7 மாகாணப்போட்டி முடிவுகளை கல்வி அமைச்சின் அழகியல் பிரிவு பிரதி கல்விப்பணிப்பாளர் (அழகியல்) பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

3.8 மாகாண போட்டியின் போது சமனிலை முடிவுகள் வழங்கப்படக் கூடாது. தேசிய போட்டிக்கு மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற பாடசாலைக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்படும்.

## 4. போட்டியில் பங்கு பற்றுதல்

4.1 தத்தமது வலயத்தில் உள்ள பாடசாலைகளை பங்குபற்றச் செய்வது அந்தந்த வலயங்களின் அழகியல் பாட பணிப்பாளரதும், அதிபரதும் பொறுப்பாகும்.

4.2 போட்டி விண்ணப்பத்தின் போது இச்சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணபப்படிவத்திற்கு அமைவாக தயாரித்து விண்ணப்பித்தல் வேண்டும்.

4.3 குறிப்பிடப்பட்ட போட்டிப் பிரிவுகள் கல்வி அமைச்சின் அழகியல் கல்வித்துறை பணிப்பாளரினால் கையொப்பமிடப்பட்டு சுற்றுநிருத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு : போட்டிகளுக்கு இலத்திரனியல் கருவிகள் முழுமையாகத் தவிர்க்கப்படல் வேண்டும். இலத்திரனியல் தம்புரா, இலத்திரனியல் ஸ்ருதி ஆகியவற்றை பயன்படுத்தலாம்.**

## 5. சான்றிதழ் வழங்குதல்

5.1 வலய மற்றும் மாகான மட்டங்களில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் செயற்பாடுகளை அந்தந்த வலயம் / மாகாணத்திலேயே ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

5.2 தேசிய ரீதியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கல்வி அமைச்சினால் சான்றிதழ் வழங்கப்படும்.

5.3 இப் போட்டியில் பங்குபற்றும் சகல போட்டியாளர்கள் மற்றும் தொடர்புடையவர்கள் போட்டியின் எல்லா சந்தர்ப்பத்திலும் இச் சுற்றுநிறுபத்திலுள்ள சட்டத்திட்டங்களை கடைப்பிடிப்பதோடு, மத்தியஸ்தர்களின் தீர்ப்பினை இறுதி முடிவாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும். தேசிய மட்ட இறுதி போட்டிகளுக்கு தெரிவாகிய பற்கு பற்றும் பாடசாலைகளுக்கு வழங்கப்படும் போட்டி நேர அட்டவணையின் இணைப்பினை நன்றாக வாசித்து விளங்கி அதிபரின் கையொப்பத்தினை உரிய முறையில் பெற்று போட்டியில் பங்குபற்ற வேண்டும்.இச் சுற்றுநிறுபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டி விதிமுறைகளை மீறியமை உறுதி படுத்தப்பட்டால் அது தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சுக்கு உரியதாகும்.

**பேராசிரியர். கே கபில சி. கே பெரேரா**
செயலாளர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய,
பத்தரமுல்ல.

## கர்நாடக சங்கீதம் - போட்டி நிகழ்ச்சிகள்

* 1. **சிரேஷ்ட பிரிவு** : இசை

தரம் : 10,11

1.1 தனி இசை - பெண்

1.கர்நாடக இசையிலமைந்த மத்திமகாலக் கீர்த்தனை

1.2 தனி இசை - ஆண்

1.கர்நாடக இசையிலமைந்த மத்தியகாலக் கீர்த்தனை

- **அறிவுறுத்தல்கள்**

1. சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
2. பக்க வாத்யங்களாக ஸ்ருதி வாத்யத்துடன் ஏதேனும் 1 தாள வாத்யம் பயன்படுத்தலாம்.
3. நேரம் 4 – 6 நிமிடங்கள்

* **சிரேஷ்ட பிரிவு : வாத்யம்**

தரம் : 10,11

தனி வாத்யம் - பெண்

| | | |
|---|---|---|
| 1.3 | வயலின் | திவ்யநாமக கீர்த்தனை |
| 1.4 | வீணை | திவ்யநாமக கீர்த்தனை |
| 1.5 | புல்லாங்குழல் | திவ்யநாமக கீர்த்தனை |
| 1.6 | நாகஸ்வரம் | திவ்யநாமக கீர்த்தனை |

தனி வாத்யம் - ஆண்

| | | |
|---|---|---|
| 1.7 | வயலின் | திவ்யநாமக கீர்த்தனை |
| 1.8 | வீணை | திவ்யநாமக கீர்த்தனை |
| 1.9 | புல்லாங்குழல் | திவ்யநாமக கீர்த்தனை |
| 1.10 | நாகஸ்வரம் | திவ்யநாமக கீர்த்தனை |

நேரம் : 4 – 6 நிமிடங்கள்

- **அறிவுறுத்தல்**

1. சிரேஷ்ட பிரிவில் இரு பாலாரும் ஸ்ருதியுடன் பக்க வாத்யமாக ஏதேனும் ஒரு தாள வாத்யத்தை பயன்படுத்தலாம்.
2. நேரம் 4 – 6 நிமிடங்கள்

* **சிரேஷ்ட பிரிவு : குழு**

குழு இசை

தரம் : 10,11

| | | |
|---|---|---|
| 1.11 | பெண்கள் | நாட்டார் பாடல் |
| 1.12 | ஆண்கள் | நாட்டார் பாடல் |
| 1.13 | இரு பாலாரும் | நாட்டார் பாடல் |

- **அறிவுறுத்தல்கள்**
    1. பாரம்பரிய இசையாக இருத்தல் வேண்டும்.
    2. 6– 10 வரையான மாணவர்கள் ஒரு குழுவில் பங்கு பற்றலாம் அதில் 3 பேர் பக்க வாத்யங்கள் இசைக்க பயன்படுத்தலாம்.
    3. குறைந்தது 4 வகை நாட்டார் பாடல்களையாவது கையாள வேண்டும்.
    4. நாட்டார் பாடல் வகை பாரம்பரியத் தன்மை பொருந்தியதாக இருத்தல் வேண்டும்.
    5. நாட்டார் பாடலில் சாஸ்த்திரிய நடன அபிநயங்கள முற்றாக தவிர்க்கப்படல் வேண்டும்
    6. நாட்டார் இசைக்குரிய இயல்பான அங்க அசைவுகள் இடம் பெறலாம்.(நடனமாக அமையக் கூடாது)
    7. நேரம் 10 – 12 நிமிடங்கள்

- **சிரேஷ்ட பிரிவு : குழு**
  வாத்ய இசை பல்லியம்
  தரம் : 10,11

| | | |
|---|---|---|
| 1.14 | பெண்கள் | [illegible] திவ்ய நாமக் கீர்த்தனை |
| 1.15 | ஆண்கள் | [illegible] திவ்ய நாமக் கீர்த்தனை |
| 1.16 | இரு பாலாரும் | விரும்பிய கோட்டுவாத்தியங்களில் ஒன்று<br>உ.தாரணம் : சக்தி சகித கணபதிம் |

- **அறிவுறுத்தல்கள்**
    1. சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
    2. குறைந்தது 4 வாத்யங்களாவது இடம்பெற வேண்டும்.
    3. நேரம் 4 – 6 நிமிடங்கள்

| போட்டி இல- 1 | |
|---|---|
| நிகழ்ச்சி | உள்ளடங்கும் இலக்கங்கள் |
| 1 | 1.1 |
| 1 | 1.2 |
| 1 | 1.3 |
| 1 | 1.4 |
| 1 | 1.5 |
| 1 | 1.6 |
| 1 | 1.7 |
| 1 | 1.8 |
| 1 | 1.9 |
| 1 | 1.10 |
| 1 | 1.11 |
| 1 | 1.12 |
| 1 | 1.13 |
| 1 | 1.14 |
| 1 | 1.15 |

- **2 சிரேஷ்ட உயர்நிலை பிரிவு : இசை**
  தரம் : 12,13
  2.1 தனி இசை - பெண்
  விரும்பிய இராகத்தில் ஆலாபனை செய்து கிர்த்தனைப் பாடி உரிய இடத்தில் கற்பனாஸ்வரம் பாட வேண்டும்.
  2.2 தனி இசை - ஆண்
  விரும்பிய இராகத்தில் ஆலாபனை செய்து கிர்த்தனைப் பாடி உரிய இடத்தில் கற்பனாஸ்வரம் பாட வேண்டும்.

- **அறிவுறுத்தல்**
    1. சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
    2. பக்க வாத்யங்களாக ஸ்ருதி வாத்யத்துடன் ஏதேனும் ஒரு வாத்யம் மட்டும் பயன்படுத்தலாம்.
    3. நேரம் 8– 10 நிமிடங்கள

**சிரேஷ்ட உயர்நிலை பிரிவு** : வாத்யம்
தரம் : 12,13
தனி வாத்யம் - பெண்

| | | |
|---|---|---|
| 2.3 | வயலின் | இலகுவான கீர்த்தனை |
| 2.4 | வீணை | இலகுவான கீர்த்தனை |
| 2.5 | புல்லாங்குழல் | இலகுவான கீர்த்தனை |
| 2.6 | நாகஸ்வரம் | இலகுவான கீர்த்தனை |

தனி வாத்யம் - ஆண்

| | | |
|---|---|---|
| 2.7 | வயலின் | இலகுவான கீர்த்தனை |
| 2.8 | வீணை | இலகுவான கீர்த்தனை |
| 2.9 | புல்லாங்குழல் | இலகுவான கீர்த்தனை |
| 2.10 | நாகஸ்வரம் | இலகுவான கீர்த்தனை |

நேரம் : 4 – 6 நிமிடங்கள்

**அறிவுறுத்தல்கள்**

1. சிரேஷ்ட பிரிவில் இரு பாலாரும் ஸ்ருதிப்பெட்டியுடன் பக்க வாத்யமாக ஏதேனும் ஒரு தாள வாத்யத்தை பயன்படுத்தலாம்.
2. நேரம் 5 – 7 நிமிடங்கள்

**சிரேஷ்ட உயர்நிலை பிரிவு** : குழு
குழு இசை
தரம் : 12,13

| | | |
|---|---|---|
| 2.11 | பெண்கள் | விரும்பிய பத வர்ணமும், காவடிச்சிந்தும் |
| 2.12 | ஆண்கள் | விரும்பிய பத வர்ணமும், காவடிச்சிந்தும் |
| 2.13 | இரு பாலாரும் | விரும்பிய பத வர்ணமும், காவடிச்சிந்தும் |

**அறிவுறுத்தல்**

1. 6 - 10 வரையான மாணவர்கள் ஒரு குழுவில் பங்கு பற்றலாம். அதில் 3 பேரை பக்க வாத்யங்கள் இசைக்க பயன்படுத்லாம்.
2. நேரம் 5 – 7 நிமிடங்கள்

**சிரேஷ்ட உயர்நிலை பிரிவு** : குழு
வாத்ய இசை பல்லியம்
தரம் : 12,13

| | | |
|---|---|---|
| 2.13 | பெண்கள் | விரும்பிய சங்கராபரண இராகத்தில் அமைந்த நோட்டுஸ்வரங்கள் |
| 2.14 | ஆண்கள் | விரும்பிய சங்கராபரண இராகத்தில் அமைந்த நோட்டுஸ்வரங்கள் |
| 2.15 | இரு பாலாரும் | விரும்பிய சங்கராபரண இராகத்தில் அமைந்த நோட்டுஸ்வரங்கள் |

**அறிவுறுத்தல்கள்**

1. சாஸ்த்திரிய இசையாக இருத்தல் வேண்டும்.
2. 8 – 12 மாணவர்கள் பங்கு பற்றலாம்
3. குறைந்தது 4 வாத்யங்கள் இடம்பெற வேண்டும்.
4. நேரம் 5 – 7 நிமிடங்கள்

| போட்டி இல - 2<br>உள்ளடங்கும்<br>நிகழ்ச்சி இலக்கங்கள் | |
|---|---|
| 2 | 2.1 |
| 2 | 2.2 |
| 2 | 2.3 |
| 2 | 2.4 |
| 2 | 2.5 |
| 2 | 2.6 |
| 2 | 2.7 |
| 2 | 2.8 |
| 2 | 2.9 |
| 2 | 2.10 |
| 2 | 2.11 |
| 2 | 2.12 |
| 2 | 2.13 |
| 2 | 2.14 |
| 2 | 2.15 |
| | |

* **3 திறந்தப் போட்டி பிரிவு** : குழு
  குழு இசை
  தரம் : 10 - 13

| | | |
|---|---|---|
| 3.1 | பெண்கள் | பாரதியின் படைப்பிலான - திரையிசைப் பாடல் |
| 3.2 | ஆண்கள் | வாலி படைப்பிலான புது பாடல்கள் - திரையிசைப் பாடல் |
| 3.3 | இரு பாலாரும் | ஓங்கார நாதங்கள் - திரையிசைப் பாடல் SPB |

* **அறிவுறுத்தல்கள்**
  1. 6 - 10 வரையான மாணவர்கள் ஒரு குழுவில் பங்கு பற்றலாம்
  2. அதில் ஸ்ருதி வாதயத்துடன் 2 பேர பக்க வாத்யங்கள் இசைக்க பயன்படுத்தலாம.
  3. நேரம் 4 – 6 நிமிடங்கள்

**திறந்தப் போட்டி பிரிவு** : குழு
வாத்ய இசை
தரம் : 10 - 13

| | | |
|---|---|---|
| 3.4 | பெண்கள் | விரும்பிய இசைகுவான கீர்த்தனை |
| 3.5 | ஆண்கள் | விரும்பிய இசைகுவான கீர்த்தனை |
| 3.6 | இரு பாலாரும் | விரும்பிய இசைகுவான கீர்த்தனை |

* **அறிவுறுத்தல்கள்**
  1. 8 – 12 மாணவர்கள் பங்கு பற்றலாம்
  2. நேரம் 7 – 10 நிமிடங்கள்

| போட்டி இல - 3<br>உள்ளடங்கும்<br>நிகழ்ச்சி இலக்கங்கள் | |
|---|---|
| 3 | 3.1 |
| 3 | 3.2 |
| 3 | 3.3 |
| 3 | 3.4 |
| 3 | 3.5 |
| 3 | 3.6 |
| 3 | 3.7 |

**நோக்கு** : மரபுரீதியான அழகியல் வெளிப்பாட்டுத் திறனை விருத்தி செய்தல்

**பணிக்கூற்று** :

1. ஷரீஆவின் வரையறைகளை அறிந்து அழகியல் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான முறைகளைப் பிரயோகிப்பார்
2. மரபுரீதியான அழகியல் வெளிப்பாடுகளைப் பாதுகாப்பதற்கான ஊக்கத்தைப் பெறுவார்
3. இயல்பான முறையில் தனது உணர்வுகளை வெளிப்படுத்தி களிப்புறுவார்
4. இஸ்லாமிய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக பலவேறு கலைவடிவங்களை பயன்படுத்தும் ஆற்றலை வளர்த்துக்கொள்வார்
5. இசையைப் பிரயோகிப்பதற்கான பொருத்தமான வடிவங்களை இனங்கண்டு அவற்றினூடாகக் களிப்புறுவார்

**போட்டி நடைபெறும் மட்டங்கள்**

இப்போட்டிகள் பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டத்திலும் நடைபெறும்.

**நிகழ்ச்சிகள்**

1. நஷீத்
2. கஸீதா
3. மஸாலா (மஸ்அலா)
4. ஹிகாயத்தும் பைத்தும்
5. களிகம்பு

**நிகழ்ச்சி இலக்கம் 01 - நஷீத்**

| போட்டி இலக்கம் | தரம் | பால் | தொகை |
|---|---|---|---|
| 4.1 | 10 - 11 | ஆண் | ஒருவர் |
| 4.2 | 10 - 11 | பெண் | ஒருவர் |
| 4.3 | 12 - 13 | ஆண் | ஒருவர் |
| 4.4 | 12 - 13 | பெண் | ஒருவர் |
| 4.5 | 10 - 13 | ஆண் | குழு (5-8) |
| 4.6 | 10 - 13 | பெண் | குழு (5-8) |

**நிகழ்ச்சி இலக்கம் 02 --கஸீதா**

| | | | |
|---|---|---|---|
| 4.7 | 10 - 11 | ஆண் | ஒருவர் |
| 4.8 | 10 - 11 | பெண் | ஒருவர் |
| 4.9 | 10 - 11 | ஆண் | குழு (5-8) |
| 4.10 | 10 - 11 | பெண் | குழு (5-8) |
| 4.11 | 12 - 13 | ஆண் | ஒருவர் |
| 4.12 | 12 - 13 | பெண் | ஒருவர் |
| 4.13 | 10 - 13 | ஆண் | குழு (5-8) |
| 4.14 | 10 - 13 | பெண் | குழு (5-8) |

நிகழ்ச்சி இலக்கம் 03–மஸ்அலா (மஸாலா)

| போட்டிஇலக்கம் | தரம் | பால் | தொகை |
|---|---|---|---|
| 4.15 | திறந்த போட்டி | ஆண் | குழு (7) |
| 4.16 | திறந்த போட்டி | பெண் | குழு (7) |

நிகழ்ச்சி இலக்கம் 04–களிகம்பு

| போட்டி இலக்கம் | தரம் | பால் | தொகை |
|---|---|---|---|
| 4.17 | திறந்த போட்டி | ஆண் | குழு (08) |

08 பேருக்கு மேலதிகமாக திரைமறைவிலோ அல்லது குரல் வடிவிலோ அல்லது பொருள் வடிவிலோ எதும் அங்கீகரிக்கப்பட மாட்டாது

நிகழ்ச்சி இலக்கம் 05. அல் ஹிகாயா வல் பைத்

| போட்டி இலக்கம் | தரம் | பால் | தொகை |
|---|---|---|---|
| 4.18 | திறந்த போட்டி | ஆண் | குழு (5-8) |
| 4.19 | திறந்த போட்டி | பெண் | குழு (5-8) |

நடுவர்கள்

1. குறிப்பிட்ட துறையில் போதிய தராதரம், தகைமை, அனுபவம் மற்றும் இஸ்லாமிய கலாசாரப் பின்னணி உள்ளவர்கள் நடுவர்களாக நியமிக்கப்படல் வேண்டும்.
2. போட்டிகள் பரீட்சைக்கு ஒப்பானவை என்பதால் பரீட்சை நடைமுறைகளை ஒத்ததாக இப்போட்டிகளின் ஒழுங்கு விதிகள் பேணப்பட வேண்டும்.

   (இட வசதிகள், ஒழுங்கமைப்பு,கண்காணிப்பு,மதிப்பீடு,போட்டியாளர் தகைமை, ஆளடையாளம் உறுதிப்படுத்தப்படல்,போட்டியின் வரையறைகள்,விண்ணப்பப்படிவம், போட்டியாலர் இலக்கம்,....)
3. ஒரு போட்டி நிகழ்ச்சிக்கு குறைந்தது மூன்று நடுவர்களேனும் நியமிக்கப்படல் வேண்டும்.

நிகழ்ச்சி இலக்கம் 01 - நஷீத்

முதலாம் பிரிவு: தரங்கள் 10 - 11

விடயம் : இஸ்லாமிய கருத்துக்களையும் கலாசார ஒழுக்கங்களையும் பிரதிபலிக்கும் கீதங்கள்

நேரம் : 4-6 நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

1. அறபு மற்றும் தேசிய மொழிகளில் அமைய முடியும்.
2. இசைக்கருவிகள் இன்றி இராகத்துடன் அமைதல் வேண்டும்.
3. உள்ளடக்கம் ஷரீஅத்துக்கு உடன்பட்டதாக அமைதல் வேண்டும்
4. தலைப்புக்கள்

**சிரேஷ்ட பிரிவு (தரம் 10 தொடக்கம் 11 வரை)**

| | | விடயம் |
|---|---|---|
| ஆண் | தனி | சுதந்திரம் அல்லது விடுதலை |
| பெண் | தனி | பெண்ணின் மகிமை |

**சிரேஷ்ட உயர்நிலை பிரிவு (தரம் 12 தொடக்கம் 13 வரை)**

| | | விடயம் |
|---|---|---|
| ஆண் | தனி | சமூக சேவை |
| பெண் | தனி | பெண்களின் சமூகப் பங்களிப்பு |

**திறந்த போட்டி பிரிவு (தரம் 10 தொடக்கம் 13 வரை)**

| | | விடயம் | போட்டியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆண் | குழு | இன நல்லிணக்கம் அல்லது தொழில்சார் பாடல்கள் | 5-8 |
| பெண் | குழு | இன நல்லிணக்கம் அல்லது தொழில்சார் பாடல்கள் | 5-8 |

**புள்ளித்திட்டம் (தனி)**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | கருப்பொருள் | 30 |
| 2 | உணர்ச்சியும் வெளிப்பாடும் | 20 |
| 3 | குரல்வளமும் இராகமும் | 20 |
| 4 | உச்சரிப்பும் தெளிவும் | 10 |
| 5 | நிலை, சமர்ப்பணம் | 10 |
| 6 | நேர முகாமைத்துவம் | 10 |
| | மொத்தம் | 100 |

**புள்ளித்திட்டம் (குழு)**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | கருப்பொருள் | 30 |
| 2 | உணர்ச்சியும் வெளிப்பாடும் | 20 |
| 3 | குரல்வளமும் இராகமும் | 20 |
| 4 | உச்சரிப்பும் தெளிவும் | 10 |
| 5 | குழு ஒருமைப்பாடு | 10 |
| 6 | நேர முகாமைத்துவம் | 10 |
| | மொத்தம் | 100 |

## நிகழ்ச்சி இலக்கம் 02 - கஸீதா

**விடயம் :** இஸ்லாமிய கருத்துக்களையும் கலாசார ஒழுக்கங்களையும் பிரதிபலிக்கும் இராகத்துடனும் இசையுடனும் அமைந்த அறபுப் பாடல்கள்.

**நேரம் :** 4 - 6 நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

1. கஸீதா அறபு மொழியில் அமைதல் வேண்டும்
2. தலைப்புக்குட்பட்டதாக அமைதல் வேண்டும்
3. உள்ளடக்கம் ஷரீஆவுக்கு உட்பட்டதாகவும் தெளிவானதாகவும் அமைதல் வேண்டும்.
4. மொழிப் பிரயோகம் தெளிவானதாக இருக்க வேண்டும்.
5. இசைக்கருவிகளின் பயன்பாடு ஷரீஆவுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

   உதாரணம் : றபான் இசை

6. நின்றோ, அமர்ந்தோ, நகர்ந்த வண்ணமோ முன்வைக்கலாம்.

### சிரேஷ்ட பிரிவு - தரங்கள் 10 - 11

| | | விடயம் | போட்டியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆண் | தனி | துஹாஉல் ஹுதா ஃ வைதாரி | |
| பெண் | தனி | துஹாஉல் ஹுதா ஃ வைதாரி | |
| ஆண் | குழு | ஹாபியுன் நபி (நபிகளார் புகழாரம்) | 5-8 |
| பெண் | குழு | ஹாபியுன் நபி (நபிகளார் புகழாரம்) | 5-8 |

### சிரேஷ்ட உயர்நிலைப்பரிவு பிரிவு - தரங்கள் 12 13

| | | |
|---|---|---|
| ஆண் | தனி | மன்ழருத் தபீஆ (இயற்கைக் காட்சி) அல்லது அஷ் ஷஜாஆ (வீரம்) |
| பெண் | தனி | மன்ழருத் தபீஆ (இயற்கைக் காட்சி) அல்லது அல் ஜமாஅ (ஒற்றுமை) |

### திறந்த போட்டி பிரிவு 04 தரங்கள் 10 - 13

| | | |
|---|---|---|
| ஆண் | குழு | ஹாபியுன் நபி |
| பெண் | குழு | ஹாபியுன் நபி |

### புள்ளித்திட்டம் (தனி)

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | கருப்பொருள் | 30 |
| 2 | குரலும் இராகமும் | 20 |
| 3 | உணர்ச்சியும் வெளிப்பாடும் | 15 |
| 4 | தாளம் | 15 |
| 5 | நிலையும் நேர்த்தியும் | 10 |
| 6 | நேரமுகாமைத்துவம் | 10 |
| | மொத்தம் | 100 |

### புள்ளித்திட்டம் (குழு)

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | கருப்பொருள் | 30 |
| 2 | குரலும் இராகமும் | 20 |
| 3 | உணர்ச்சியும் வெளிப்பாடும் | 15 |
| 4 | தாளம் | 15 |
| 5 | குழு ஒருமைப்பாடு | 10 |
| 6 | நேரமுகாமைத்துவம் | 10 |
| | மொத்தம் | 100 |

### நிகழ்ச்சி இலக்கம் 03 - மஸ்அலா (மஸாலாப் பாடல்கள்)

**விடயம் :** கருப்பொருளகளுக்கேற்ப புதிர் வடிவிலான விளாக்களை முன்வைத்தலும் பதிலளித்தலும்

**நேரம் :** 12 - 15 நிமிடங்கள்

**நிகழ்ச்சிவிபரம் :**

1. உஸ்தாதும் துல்லாபுகளும் குழுவாக அமர்ந்திருப்பார். உஸ்தாத் மத்தியிலும் உஸ்தாதுக்கு வலது, இடது பக்கங்களில் துல்லாபுகள் மும்மூன்றுபேர் அமர்ந்திருப்பர்.
2. உஸ்தாத் பெரிய ரபானும், ஏனையவர்கள் சிறிய வடிவிலான ரபானும் பயன்படுத்துவர்.
3. உஸ்தாத் புதிர்வடிவில் ஒரு செய்தியை முன்வைப்பார். அது தொடர்பாக ஆசாரியத்தோடும், நகைச்சுவையோடும் துல்லாபுகள் புதிர் கேள்விகளைத் தொடுப்பர். அதற்கு பாடல் வடிவிலும், உரைநடை வடிவிலும் உஸ்தாத் விளக்கமளிப்பார்.
4. பொருத்தமான சந்தர்ப்பங்களில் உஸ்தாதும் துல்லாபுகளும் ரபானை உபயோகிப்பர்.

### விசேட நிபந்தனைகள்

1. ஆண்கள் மாத்திரம் பங்குபற்ற முடியும்.
2. ஒரு பாடசாலையில் ஒரு குழு மாத்திரமே பங்குபற்ற முடியும்.
3. மரபு ரீதியாக அமைதல் வேண்டும்.
4. ஒவ்வொருவரும் மரத்திலான இரு தடிகளை பயன்படுத்த வேண்டும்.
5. பாடல்கள் ரீ.ஆவுக்கு உட்பட்ட உள்ளடக்கங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. பின்வரும் கருப்பொருட்களை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**தரம் 10 - 13 வரை - திறந்த போட்டி**

புள்ளித்திட்டம்

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | கருப்பொருள் | 30 |
| 2 | [illegible] சந்தங்களின் தாக்கமும் உணர்ச்சி வெளிப்பாடும் | 20 |
| 3 | பக்கப்பாட்டு விளாக்களின் பொருத்தப்பாடும் நகைச்சுவையும் | 20 |
| 4 | தலைமைத்துவமும் குழு ஒருமைப்பாடும் | 15 |
| 5 | ஆடை அலங்காரம் | 05 |
| 6 | நேர முகாமைத்துவம் | 10 |
| | மொத்தம் | 100 |

### நிகழ்ச்சி இலக்கம் 04 - அல் ஹிகாயா வல் பைத்

**விடயம்:** இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளை பாடல்களாகவோ, பைத்களாகவோ முன்வைத்து அதற்கான விளக்கங்களை உரைநடை வடிவில் எடுத்துரைக்கும் குழு நிகழ்ச்சி

**நேரம் :** 12-15 நிமிடங்கள்

**விசேட நிபந்தனைகள்**

1. ஆண்களில் இருந்து ஒரு குழுவும் பெண்களில் இருந்து ஒரு குழுவும் தனித்தனிக் குழுக்களாக பங்குபற்ற முடியும்.
2. பைத்களையும் பாடல்களையும் கூட்டாக முன்வைப்பதோடு அதற்கான விளக்கத்தை (ஹிகாயத்தை) ஒவ்வொருவராக எடுத்துரைத்தல் வேண்டும்.
3. பைத், ஹிகாயத என்பன உயிரோட்டமானதாகவும், உணர்வுபூர்வமானதாகவும் அரங்கேற்றப்படல் வேண்டும்.
4. பைத் அறபு மொழியிலும் விளக்கம் தமிழில அல்லது சிங்களத்தில் இடம்பெறல் வேண்டும்.
5. ஆரிஅ, வரையறைகள் பேணப்படல் வேண்டும்
6. ஒரு குழுவில் 5-8 வரையிலான மாணவர்கள் உள்ளடங்கலாம்.

**தரம் 10 -13 வரை - திறந்த போட்டி**

**விடயப்பரப்பு**

1. நபிமார்களின் வரலாறு
2. ஸஹாபாக்களின் வரலாறு
3. இமாம்களின் வரலாறு
4. அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள்

**புள்ளித்திட்டம்**

| இல | விடயம் | புள்ளி |
|---|---|---|
| 1 | கருப்பொருள் | 30 |
| 2 | ஆக்கத்திறனும் உணர்வுபூர்வமான முன்வைப்பும் | 20 |
| 3 | இராகமும், விளக்கமும் | 20 |
| 4 | குழு ஒருமைப்பாடு | 10 |
| 5 | ஆடை அலங்காரம் | 10 |
| 6 | நேர முகாமைத்துவம் | 10 |
| | மொத்தம் | 100 |

**குறிப்பு : நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தும் ஒழுங்கு**

1. குறித்த ஒவ்வொரு போட்டியும் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்டு முதலாம் இடத்தைப் பெறுபவர் அல்லது பெறும் குழு வலய மட்டப் போட்டியில் பங்குபற்றும் தகைமை பெறுவர்.
2. வலய மட்டத்தில் நடாத்தப்படும் போட்டியில் முதலாம் இடம் பெறும் குழு அல்லது பெறுபவர் மாகாண மட்ட போட்டியில் பங்குகொள்ளும் தகைமை பெறுவர்/பெறும்.
3. மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சியில் முதலாம் இடம் பெறும் குழு அல்லது பெறுபவர் தேசிய மட்ட போட்டியில் பங்குகொள்ளும் தகைமை பெறுவர்/பெறும்.
4. தேசிய மட்ட நிகழ்ச்சிகளில் நடுவர் குழுவினால வழங்கப்பட்ட அதி உச்சப் புள்ளி 33 இலும் குறைந்ததாக அமையின் அவருக்கு அல்லது அக்குழுவுக்கு தேசிய மட்ட விருது வழங்கப்பட மாட்டாது.
5. தேசிய மட்டத்தில் போட்டிகளில் பங்குகொள்வோர் ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அடையாள அட்டை அல்லது மாகாணக் கல்விப் பணிப்பாளர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்பட பிரதியை பயன்படுத்தல் வேண்டும்

கலாநிதி நிசாந் ஹந்தும் பத்திரண
பதில் கல்விப் பணிப்பாளர் (அழகியல்)
அழகியற் பிரிவு
கல்வி அமைச்சு
இசுருபாய
பத்தரமுல்ல

## இணைப்பு 01

### மாதிரி விண்ணப்பப் படிவம்

(இம் மாதிரிக்கேற்ப விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கும்பொழுது தட்டச்சு அல்லது கணினியைப் பயன்படுத்துவது சிறப்பானது)

# அகில இலங்கை பாடசாலை கர்நாடக சங்கீதப்போட்டியும் முஸ்லிம் மாணவர்களுக்கான போட்டியும் - 2022

(உரிய கூட்டினுள் √ அடையாளம் இடுக) பாடசாலை மாணவர் தொகை

| 300 இற்குக் குறைந்த | 301 – 1000 இற்கும் இடைப்பட்ட | 1001 இற்கு மேற்பட்ட |
|---|---|---|
| | | |

01. பாடசாலையின் பெயரும் முகவரியும் :-

02. தொலைபேசி இலக்கம் (பாடசாலை ................. அதிபர் .............. ஆசிரியர் ................)

03. பாடசாலை அமைந்துள்ள மாகாணம் :

04. பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயம் :

05. தோற்றுகின்ற போட்டியின் பெயர் : (சுற்றுநிருபத்துக்கேற்ப குறிப்பிடுக)

| | போட்டித் தலைப்புகள் | நிகழ்ச்சி இலக்கம் | தனி / குழு |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |

06. போட்டியில் பங்குபற்றும் மாணவ மாணவியரின் பெயர்ப்பட்டியல் ( ENGLISH CAPITAL) ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் எழுதுக)

| | மாணவ / மாணவியின் பெயர் | பெண் / ஆண் | கல்வி கற்கும் தரம் | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

(குழுப் போட்டிகளின் போது தேவையான விதத்தில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

07. போட்டிக்கான உதவி

7.1. வாத்தியம்

| | மாணவ / மாணவியின் பெயர் | பெண் / ஆண் | பாடசாலை | கல்வி கற்கும் தரம் | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |

(குழுப் போட்டிகளின் போது தேவையான விதத்தில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

7.2. உதவி வாத்தியம்

**(வாத்தியத்துக்காக ஆசிரிய ஆசிரியைகள் பங்குபற்றுவார்களாயின் அவர்களின் பெயருக்கு எதிரில் திரு/திருமதி/செல்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும்)**

| | ஆசிரியரின் பெயர் | பெண் / ஆண் | பாடசாலை | பிறந்த திகதி | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

(குழுப் போட்டிகளின் போது தேவையான விதத்தில் தயாரித்துக்கொள்ளல் வேண்டும்)

08. போட்டி நிகழ்ச்சியைப் பயிற்றுவித்த ஆசிரிய ஆசிரியைகள்

| ஆசிரியரின் பெயர் | பாடசாலை | தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |

09. மாணவ / மாணவிகளுக்குப் பொறுப்பாக வருகைதரும் ஆசிரியர்களின் விபரம்

| ஆசிரியரின் பெயர் | கற்பிக்கும் பாடம் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் | கையொப்பம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

மாணவிகளின் நிகழ்ச்சியாயின் ஆசிரியையொருவரும் மாணவர்களின் நிகழ்ச்சியாயின் ஆசிரியரொருவரும் கலப்பு நிகழ்ச்சியாயின் ஆசிரிய ஆசிரியைகளும் பொறுப்பாளராகப் பங்குபற்றுதல் வேண்டும்.

## இணைப்பு 02

### புகைப்படம் உறுதிப்படுத்தல்
(அதிபரினால் பூரணப்படுத்துவதற்காக)

## அகில இலங்கை பாடசாலை கர்நாடக சங்கீதப்போட்டியும் முஸ்லிம் மாணவர்களுக்கான போட்டியும் -2022

பாடசாலையின் பெயரும் முகவரியும் :-

1. மாணவ / மாணவியின் பெயர் :-
2. கல்வி கற்கும் தரம் :-
3. பிறந்த திகதி :-
4. போட்டி நடைபெறும் வருடத்தின் ஜனவரி 01ஆம் திகதிக்கு வயது :-

**மேற்குறிப்பிட்ட மாணவன் / மாணவி எனது பாடசாலையில் குறிப்பிட்ட தரத்தில் கல்வி பயில்கிறார் எனவும் அவர் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன்.**

திகதி :- ..........................

..........................................

அதிபரின் கையொப்பம்

பாடசாலை முத்திரை :

கல்வி வலயத்தின், கோட்டத்தின் சங்கீத பாடப்பொறுப்பு பி.க.ப/உ.க.ப/ ஆசிரிய ஆலோசகரின் சிபார்சு

அதிபரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட மாணவன் / மாணவி பற்றிய தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் என சிபார்சு செய்கின்றேன்.

சங்கீத பி.க.ப / உ.க.ப/

ஆசிரிய ஆலோசகரது கையொப்பம்

பதவி முத்திரை மற்றும் திகதி:-

இப் போட்டியில் பங்குபற்றுகின்ற மாணவ மாணவிகள் அவர்கள் பங்குபற்றுகின்ற போட்டி நிகழ்ச்சிகளுக்குரிய தரங்களில் கல்விகற்கின்றார்கள் என்பதும் சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ள சகல போட்டி நிபந்தனைகளின் படி போட்டியிடக் கட்டுப்பட்டுள்ளார்கள் என்பதும் போட்டிகளின் போது மாணவர்களுக்குரிய பொறுப்பாளர்களாக பெற்றோரையோ அல்லது வேறு நபர்களையோ அனுமதிப்பதில்லை என்பதும் நடுவர்களால் வழங்கப்படும் தீர்ப்பினை இறுதித் தீர்ப்பாகக் கொள்வதாகவும் சகல சந்தர்ப்பங்களிலும் எனது பாடசாலையின் மாணவ மாணவியர் ஒழுக்கமாக நடந்து கொள்ளும் பொறுப்பினை தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்கிறேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

ஆசிரியரின் கையொப்பம்

அதிபரின் கையொப்பம்

ஆசிரியரின் பெயர்

அதிபரின் பெயரும் பாடசாலை முத்திரையும்

திகதி

திகதி

குறிப்பு : போட்டியில் தோற்றுகின்ற சகல மாணவ மாணவியரும் போட்டி நிகழ்ச்சிக்குரிய தரங்களில் கல்வி கற்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதும் பெயர்ப்பட்டியலைப் பரீட்சித்து ஒப்பமிடுவதும் அதிபரது பொறுப்பாகும்.